ஜுன் 11

## எதிர்ப்பு

**அப்போஸ்தலர் 13:44-52**



நற்செய்தியை மிகச்சிலரே உண்மையான காரணங்களால் எதிர்க்கிறார்கள்.

பாபு வேதம் முழுவதிலும் முரண்பாடுகள் அதிகம் என நினைக்கிறான். ஆனால் உண்மையான காரணம் ஒருமுறை அவன் பரிசுத்த ஆவியானவரால் கண்டித்து உணர்த்தப்பட்டும் தான் விரும்பும் வழியிலேயே வாழ தீர்மானித்தது தான்!



உமா இப்பொழுதெல்லாம் இயேசுவை விசுவாசிப்பதில்லை. உண்மையான காரணம் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் அவளது தோழிகள் அவள் வாழ விரும்பும் முறையைக் கண்டிப்பது தான்.



சுரேஷ் பல சபைப் பிரிவுகள் தன்னை தடை செய்கின்றன என்று கூறுகிறான். ஆனால் உண்மையான காரணம், அவனது குடும்பத்தினர் தங்களது கொள்கைகளை கலைத்து விடுவதை விரும்பாதவர்கள்.

அப்போஸ்தலர் 13:47

ஜுன் 12

## பேரிழப்பு

**ரூத் 1:1-9**



பஞ்சம் – அந்நிய தேசத்தில் புதியவர்கள் – கணவன் மற்றும் இரு குமாரர்களின் இறப்பு – விதவையான தாயும் இளம் மனைவியர் இருவரும் – ஏன் இத்தனை இழப்புகள்? மரணங்கள் ஏன் ஏற்படுகின்றன என்று திட்டமாக நம்மால் சொல்ல முடியாது. ஆனால் பஞ்ச நாட்களில் எலிமெலேக்கின் குடும்பத்தினர் கர்த்தருடைய தேசத்தைவிட்டு ஓடிப் போனது ஒரு காரணமாகும். உணவுப் பிரச்சனை தீர்ந்தது.

ஆனால் நிரந்தரமான ஆசீர்வாதங்களை விட்டு தூரச் சென்று விட்டனர்.

நகோமி எப்போது திரும்பி வந்தாளோ அன்றே துன்ப வரலாறு முடிந்தது.



**எச்சரிக்கையாயிரு :** கர்த்தரின் வழிகளை விட்டு விலகினால் துன்பங்களை வேண்டுமென்றே கேட்டுப் பெற்றுக் கொள்கிறாய் என்பதை மறவாதே.

சங்கீதம் 25:4